# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 08.10.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை அலுவலர்கள் அடங்கிய குழு பரிந்துரையின் அடிப்படையில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொகை குறைக்கப்பட்டு 29.06.2018 அன்று மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு. குருபிரசாத் என்பவர் ரூ. 3,00,600/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதனை ஏற்று மேற்படி இனத்தினை இவருக்கு ஒப்படைத்து இதற்கான அறிவிப்பு 30.07.2018ஆம் நாளைய இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக ஏலதாரரான திரு. குருபிரசாத் என்பவருக்கு அனுப்பப்பட்டு மேற்படி குத்தகை இனத்திற்கு இவரால் 01.08.2018 முதல் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தவிர மேற்படி குத்தகை இனத்திற்கு முதலாம் ஆண்டுக்கான ஓராண்டு குத்தகை தொகை (01.08.2018 முதல் 31.07.2019 முடிய) வருமான வரி மற்றும் கூடுதல் வைப்புத்தொகை சேர்த்து ரூ. 4,61,772/– இவரால் 13.08.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்திற்கு தேவையான அனைத்து கூடுதல் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ரூ 51.00 கோடிக்கு தோராய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இதன் காரணமாக மேற்கண்ட ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி இனமானது இப்பணிகள் துவக்கப்படும் நிலையில் தொடர்ந்து செயல்பட இயலாது என்பதால் இவருக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்படி குத்தகை இனத்தினை ரத்து செய்தும் இவரால் செலுத்தப்பட்ட முதலாமாண்டுக்கான ஏலத்தொகையில் அனுபவித்த காலத்திற்கான தொகையினை நேர் செய்து மீதமுள்ள தொகையினை இவருக்கு திருப்பி வழங்கவும் இதற்கான உரிய அறிவிப்பினை இவருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்திற்கு பொருள் வைத்து முடிவு செய்யலாம்.<br>2016–2019 முடிய உள்ள மூன்றாண்டு காலத்திற்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையின் பொது நிபந்தனைகள் 17ன் படி "லைசென்ஸ்" அல்லது உரிமையாணை காலத்தில் லைசென்ஸ்தாரரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் மாநகராட்சி சொத்துக்கள் முழுவதும் அல்லது எந்த பாகமாவது மாநகராட்சிக்கு | 161) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தேவையெனில் லைலென்சுதாரர் எவ்வித தடையுமின்றி எவ்வித ஈடு தொகையும் (Comonsation) கோராமல் மாநகராட்சியிடம் ஒப்படைத்து விட வேண்டும். இதில் மாநகராட்சி தீர்ப்பே முடிவானது. சந்தையை அல்லது சந்தையிலுள்ள கடைகள் மற்றும் வணிக வளாக கடைகளை மாநகராட்சி திருத்தி அமைக்கவோ செப்பனிடவோ செய்யும் கடைகளில் உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படும் வணிக குறைவிற்கோ இழப்பிற்கோ யாதொரு நஷ்ட ஈடும் கேட்க அவருக்கு உரிமையிலலை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குத்தகைக்கு விடப்பட்ட இனமானது மாநகராட்சி அபிவிருத்தி பணிகளுக்கு தேவைப்படுவதால் இக்குத்தகை இனத்தினை ரத்து செய்யவும், இவரால் செலுத்தப்பட்ட முதலாமாண்டுக்கான ஏலத்தொகையில் அனுபவித்த காலத்திற்கான தொகையை நேர் செய்து மீதமுள்ள தொகையினை இவருக்கு திருப்பி வழங்கலாம் இதற்கான அறிவிப்பினை இவருக்கு சார்வு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். அ16/4741/15 | |
| | 2. தூத்துக்குடி மாநகராட்சி– பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் பணியாளர்கள் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியை மழைக்காலரங்களில் தொய்வின்றி மேற்கொள்ளவும், மழைநீர் அகற்றும் பணிகளை மேற்கொள்ளும் வகையில் மேற்படி பணியில் ஈடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், தூய்மை காவலர்கள் ஆகியோர்களுக்கு தேவையான சீருடைகள் (சேலைகள் எண்ணம் 518 சட்டை மற்றும் முழுக்கால் சட்டைகள் எண்ணம் 340 மிளிரும் அமைப்புடன் மேல்சட்டை எண்ணம் 858) மற்றும் மழை கோட் (Rain Coat) எண்ணம் 176 ஆகியவற்றை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற நிறுவனமான "The TamilNadu Textile Corporation Ltd., Coimbatore" நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/4850/17 | 162)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். ந.க.எண். 22660/2018/டிபி–4 நாள் 25.09.2018ன் படி, கட்டிட அனுமதி கூர்ந்தாய்வு கட்டணம் நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கும் மாறுபட்டுள்ளதால், அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான கட்டணவிகிதமாக ரூ.500/–னை (ஐநூறு மட்டும்) 15.10.2018 முதல் கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சமயத்தில் இணையதள வாயிலாக செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வருகின்ற 15.10.2018ல் இதனை தூத்துக்குடி மாநகராட்சியில் | 163. பதிவு செய்யப்பட்டது. |

<table>
<tr><td></td><td>நடைமுறைப்படுத்தும் பொருட்டு மேற்படி சுற்றறிக்கையானது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>எப்1/1503/17</td><td></td></tr>
<tr><td></td><td>4. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “சீர்மிகு நகரம்” (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “சீர்மிகு நகரம்” (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிடப் பட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட் லிமிட்டெட், அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 0404 நாள் 18.09.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பணிகளின் பெயர்</td><td>மதிப்பீட்டுத்தொகை (ரூ.லட்சத்தில்)</td></tr>
<tr><td>1</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பாளையங்கோட்டை ரோடு மேற்கு பகுதியில் உள்ள இடுகாடு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>451.56</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>451.55</td></tr>
</table>
<br>எனவே தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடுகாடு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ 451.55 லட்சம் மதிப்பீட்டினை ஸ்மார் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3200/2015 (Bur)</td><td>164) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>5. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “சீர்மிகு நகரம்” (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “சீர்மிகு நகரம்” (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.</td><td>165)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td></tr>
</table>

அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 0404 நாள் 18.09.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பாளையங் கோட்டை ரோடு மேற்கு பகுதியில் அமைந்துள்ள டோபிகானா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | 704.16 |
| | மொத்தம் | 704.16 |

எனவே தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான டோபிகானா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ 704.16 லட்சம் மதிப்பீட்டினை ஸ்மார் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/3200/2015 (Bur)

6. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம்" (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம்" (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிடப் பட்டுள்ளது.

166) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.

அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 0404 நாள் 18.09.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான ஜெயராஜ் ரோடு பூ மார்க்கட் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி. | 1200.00 |
| | **மொத்தம்** | 1200.00 |

| | | |
|---|---|---|
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான ஜெயராஜ் ரோடு பூ மார்க்கெட் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டும் பணிகளை ரூ. 1200.00 லட்சம் மதிப்பீட்டில் ஸ்மார் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (MLCP) | |
| | 7. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் பூ தலைச்சுமை கூவி விற்கும் உரிமம் பல முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் ஏலம் போகாத காரணத்தால் இந்த இனத்திற்கான ஏலத்தொகையினை குறைத்து நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டு இறுதியாக 29.06.2018 அன்று ஏலம் . ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நிர்வாகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகையான ரூ. 50.00க்கு குறைவாக திரு. தனமுருகன் என்பவர் ரூ. 45.100க்கு ஏலம் கோரியுள்ளார்.<br>இந்நிலையில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்திற்கு தேவையான அனைத்து கூடுதல் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ரூ. 51.00 கோடிக்கு தோராய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது.<br>எனவே மேற்படி இனத்தினை இது தொடர்பான பணிகள் நிறைவு பெறும் வரை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதைனை தற்காலிகமாக நிறுத்தம் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.அ16/4741/15 | 167) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 8. உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்கனவே உள்ள சொத்து வரியினை பொது சொத்துவரி சீராய்வு, மூலம் 01.04.2018 முதல் மாற்றி அமைக்க அரசாணை எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.IV) நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி IV) நாள் 26.07.2018ல் ஆணையிடப்பட்டுள்ளதை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டது. அதன்படி மாமன்றம் இவ்வரசாணைகளை பதிவு செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.<br>அதனை தொடர்ந்து வரப்பெற்ற 20.08.2018ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கடிதம் ந.க.எண்.20555/2018/R1 சுற்றறிக்கையில் 01.04.2018 முதல் முன்தேதியிட்டு பொது சொத்துவரி சீராய்வு குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி வழிகாட்டி நெறிமுறைகளில் சொத்தின் அமைவிடம், பிரதான பயன்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் (Location, Predomina usage, the infrastructure available etc) ஆகியவற்றின் அடிப்படையில் மாநகராட்சிப் பகுதிகளை A.B. மற்றும் C என மண்டலங்களாக வகைப்படுத்தவும் மாநகராட்சியில் D மண்டலம் ஏதும் இருப்பின் அதனை C மண்டலமாக வகைப்படுத்திடவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மண்டலங்களாக வகைப்படுத்துவதற்கு ஏதுவாக மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக மண்டலங்களைப் பிரித்தும், மேற்படி குழு மண்டலங்கள் வாரியாக நிர்ணயிக்கும் வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் அடிப்படை மதிப்பை நிர்ணயம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அடிப்படை மதிப்பு குடியிருப்புக் கடடிடத்திற்கு 50 சதவீதம் மிகாமலும் சதுர அடிக்கு (வெளிபுற பரப்பிற்கு) நிர்ணயிக்கப்படும் அடிப்படை மதிப்பாகும். கல்வி நிறுவனங்களுக்கு ஒன்றறை மடங்காகவும், தொழிற்சாலை உபயோக கட்டிடத்திற்கு இரு மடங்காகவும், வணிக பயன்பாட்டிற்கான கட்டிடங்களுக்கு மூன்று மடங்காகவும் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு 50 சதவீதம் மிகாமலும் மற்றும் அரசு அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தால் 50% வரி உயர்வு நிர்ணயம் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்படி அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டு தல ஆய்வுகள் மேற்கொண்டு கீழ்க்கண்டவாறு A.B. மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரித்து அடிப்படை மதிப்பு (வெளிபுற பரப்பிற்கு) நிர்ணயம் செய்வதற்கு பரிந்துரைத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>இம்மண்டல வகைப்பாடானது 1 முதல் 60 வார்டுகளுக்கும் பொருந்துவதாகும். | 168)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு (01.04.2008 முதல்) | உயர்த்தப்படவுள்ள மதிப்பு (01.04.2018 முதல்) |
| (1) | (2) | (3) |
| A | ரூ. 2.00 | ரூ.3.00 |
| B | ரூ. 1.50 | ரூ. 2.25 |
| C | ரூ.1.00 | ரூ.1.50 |
| D | ரூ.0.60 | தற்போது நீக்கம் செய்யப்பட்டது.. |

<u>கட்டிடத்தின் வயதிற்கான தள்ளுபடி</u>

மேற்கண்ட சுற்றறிக்கையில் கட்டிடங்களுக்கு கட்டிடத்தின் வயதுக்கு ஏற்ப தள்ளுபடி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 5 ஆண்டுகள் வரை | தள்ளுபடி இல்லை |
| 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை | 10 |
| 15 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் | 15 |
| 25 ஆண்டிற்கு மேல் | 20 |

**கட்டிடத்தின் தன்மைக்கான தள்ளுபடி**

| | | |
|---|---|---|
| 1) | சிமெண்ட் கான்கிரீட் கூரை | இல்லை |
| 2) | ஓடு, ஆஸ்பெட்டாஸ், ஜி ஏசீட் | 25 |
| 3) | கீற்று கூரை | 50 |

கட்டிடத்தின் பயன்பாடு

| | | |
|---|---|---|
| 1) | கல்வி நிறுவன பயன்பாடு | அடிப்படை மதிப்பில் 1 1/2 மடங்கு |
| 2) | தொழிற்சாலை பயன்பாடு | அடிப்படை மதிப்பில் இரு மடங்கு |
| 3) | வணிக பயன்பாடு, மருத்துவமனை உட்பட, திருமண மண்டபம் மற்றும் இதர பயன்பாடு | அடிப்படை மதிப்பில் மூன்று மடங்கு |

வாடகை அடிப்படையில் விளம்பர, பதாகைகள் மற்றும் தொலைதொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளை வணிக கட்டிடங்கள் என கருதிட இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்திய வரி உச்ச வரம்பிற்கு உட்பட்டது.

| | | |
|---|---|---|
| 1) | குடியிருப்பு கடிடங்கள் | முந்தைய வரி+50 சதவீதம் அதாவது (அரையாண்டு வரி 1.50) |
| 2) | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | முந்தைய வரி +100சதவீதம் அதாவது (அரையாண்ட வரி X 2.00) |

1.04.2017 முதல் 31.03.2018 வரை புதிய சொத்துவரி விதிப்புகளுக்கு இவ்வரி உயர்வு இல்லை.

மேற்கண்ட வழிகாட்டுதல்களின்படி 01.04.2018 முதல் பொது சொத்து வரி சீராய்வு செய்திடவும், 01.04.2018 பிறகு நிர்ணயிக்கப்படும் புதிய வரிவிதிப்புகளை மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், ஏற்கனவே உள்ள இது சார்ந்த விதிமுறைகளின்படியும் பின்பற்றி செயல்படுத்தவும், தனி அலுவலர் அவர்களின் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்குறிப்பிட்ட அரசு வழிகாட்டி நெறிமுறைகளின்படி பொது சொத்து வரி சீராய்வு செய்யவும், மேற்படி வழிகாட்டி நெறிமுறைகளின்படி 01.04.2018க்கு பிறகு புதிதாக வரிவிதிப்பு செய்யப்படும் புதிய வரிவிதிப்புகளுக்கு சொத்து வரி விதித்திடவும் உரிய ஒப்புதல் வழங்கலாம்.
2. இம்மாநகராட்சியின் அனைத்து வரிவிதிப்பு பகுதிகளையும் A, B மற்றும் C என 3 மண்டலங்களாக வகைப்படுத்தி ஒரு சதுரடிக்கு (வெளிப்புற பரப்பு) A, மண்டலத்திற்கு ரூ. 150 என்றும், அடிப்படை மதிப்பு நிர்ணயித்தும், இதனை குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஒரு மடங்காகவும் தொழிற்சாலை உபயோக கட்டிடங்களுக்கு இரு மடங்காகவும், வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு மூன்று மடங்காகவும் கல்வி நிறுவனங்களுக்கு ஒன்றறை மடங்காகவும், அரசு கட்டிடங்களுக்கு 50 சதவீதமும் நிர்ணயம் செய்திட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் அரசு அலுவலகங்கள் வாடகை கட்டிடத்தில் இயங்கினால், வாடகை அடிப்படையிலும் நிர்ணயம் செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அ1/0336/2018 (மையம்)

<table>
<tr>
<td></td>
<td>
9. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “ சீர்மிகு நகரம் “ தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “சீர்மிகு நகரம்” (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAII) எண். 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.
அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமைல் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 04.04 நாள் 18.09.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடி)</th></tr>
<tr><td>1</td><td>தூத்துக்கடி மாநகராட்சி பகுதி சார்ந்த வளர்ச்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>77.36</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>77.36</td></tr>
</table>
மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு ஸ்மார்சிட்டி 5வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு கூட்ட நடவடிக்கை நாள் 12.09.2018 மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் லிமிட், கடிதம் எண். TUFIDCO/HPPSC/235/AM(M) EHS 01.10.2018 இல் மதிப்பீடு அறிக்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
எனவே 12.09.2018ஆம் தேதிய ஸ்மார்ட் சிட்டி 5வது உயர்மட்ட திட்ட அனுமதி குழு கூட்ட நடவடிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.
இ1/3209/2015 (SWD -ABD)
</td>
<td>169) பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>10) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ''சீர்மிகு நகரம்'' (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட ''சீர்மிகு நகரம்'' (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) (MAII) எண். 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமைல் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 04.04 நாள் 18.09.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடி)</th></tr>
<tr><td>1</td><td>இலகுரக வாகனம் Purchase of Tipper (Capacity 3.2 CuM) – 10Nos.</td><td>Rs. 61,28,870/-</td></tr>
</table>
<br>எனவே தூத்துக்குடி மாநகராட்சி சுகாதார பிரிவுக்கு தேவையான இலகுரக வாகனம் (Tipper Capacity 3.2CuM) 10 எண்ணம் வாங்கும் பணியினை ரூ. 61,28,870/– மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/3209/2015 (Tipper)</td>
<td>170) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>11. இம்மாநகராட்சியில் கட்டிட உரிமக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் மாமன்ற தீர்மான எண். 43 நாள் 31.3.2012ல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமம் மற்றும் இதரக் கட்டணங்களில் விடுபட்ட இனங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியடிலின்படி (Schedule of Rates) கட்டணங்களில் நிர்ணயிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.</td>
<td></td>
</tr>
</table>

<u>அனுமதி கட்டணங்களின் விவரப் பட்டியல்</u>

| வ. எண் | சட்டப் பிரிவு | விவரம் | பழைய கட்டண விகிதம் | | | உத்தேசிக்கப்–பட்ட திருத்திய கட்டண விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | அனுமதி கட்டணம் | யூனிட் | அனுமதி காலம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 250<br>1) | அ) காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டுமனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற மேற்பார்வை கட்டணம் (குறைந்த பட்ச கட்டணம் ரூ.2500) | 3545 | 001 ஏக்கர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 5000 |
| | 2) | ஆ)அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை உட்பிரிவு அல்லது மனை ஒருங்கிணைப்பு அனுமதி பெற | 533 | ஒரு மனை மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 600 |
| 2• | | அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெற (அல்லது)<br><br>அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நில உபயோக மாற்றம் செய்ய அங்கீகாரம் பெற (மேற்பார்வை கட்டணம்) | –– | – | ஒரு முறை | 20000 |
| 3 | 260 | சாலையின் ஓரம் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறின்றி அமைக்கப்படும் தற்காலிக விளம்பர தட்டிகள், துணி பேனர்கள் | 250 | இனம் ஒன்றிற்கு | 6 நாட்கள் | 250 |
| 4 | | <u>மாநகராட்சிக்கு சொந்தமான பொது இடங்கள், சாலை, தெரு ஓரங்களில் பந்தல் போடுவதற்கு</u><br>i)கோவில்கள், மசூதிகள், சர்ச் முதலிய மத சம்பந்தமானகட்டிடங்களின் முன்பாக திருவிழா மற்றும் விஷேச காலங்களில் போடப்படும் தற்காலிக பந்தல்கள் | | இலவசம் | 3 நாட்கள்<br><br>1. சாலை சேதப்படக் கூடாது.<br><br>2.அனுமதி<br><br>இல்லாததை தனியாக கருதவேண்டும் | இலவசம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ii)துக்க காரியங்களுக்கு கட்டிடங்களின் முன் போடப்படும் தற்காலிக பந்தல்கள் | | இலவசம் | 3 நாட்கள் | இலவசம் |
| | | iii)திருமணம் மற்றும் விசேஷ காலங்களில் போடப்படும் தற்காலிக பந்தல்கள்<br><br>a)கட்டிடங்களின் முன் | – | இனம் ஒன்றிற்கு | 1நாள் | 500 |
| | | b)திருமண மண்டபங்களின் முன் | – | இனம் ஒன்றிற்கு | 1நாள் | 500 |
| 5 | | மாநகராட்சிக்கு சொந்தமான மின்விளக்கு கம்பங்களில் $2' \times 2\,^{1}/_{2}$ அளவிலான தட்டிகளில் விளம்பரம் செய்ய விளம்பர வரி கட்டணம்<br>(மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் மட்டும்) | – | இனம் ஒன்றிற்கு | 1 ஆண்டிற்கு | ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டும் |
| 6 | 268 | குடிசை நீங்கலாக கட்டிடம் கட்ட<br><br>மனை அங்கீகாரம்<br><br>அ) குடியிருப்பு உபயோக கட்டிடம் | | இடம் ஒன்றுக்கு | 3 ஆண்டுகள் | |
| | | i) 250 ச.மீ வரை உள்ள மனைகளுக்கு | 253 | – | – | 253 |
| | | ii)250 முதல் 500ச.மீட்டருக்கு வரை அமையும் மனைகளுக்கு | 506 | – | – | 600 |
| | | iii)500ச.மீட்டருக்கு மேல் அமையும் மனைகளுக்கு | 506 | – | – | 1000 |
| | | ஆ)குடியிருப்பில்லாத கட்டிடங்கள் | | | | |
| | | i) 250ச.மீ வரை உள்ள மனைகளுக்கு | 253 | | | 600 |
| | | ii) 250ச.மீ முதல் 500ச.மீ மேல் உள்ள மனைகளுக்கு | 506 | | | 1000 |
| | | iii) 500ச.மீ மேல் உள்ள மனைகளுக்கு | 506 | | | 2000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 272• | **<u>கட்டிட உரிமையாணைக் கட்டணம்</u>**<br><br>I) குடிசை நீங்கலாக புதிய கட்டிடம் கட்டுதல் – பழைய கட்டிடத்தில் மாறுதல்கள் செய்து<br><br>கட்டிடம் கட்டுதல் – கூடுதல் கட்டிடம் கட்டுதல் | | | | |
| | | **<u>அ)குடியிருப்பு உபயோக கட்டிடம்</u>**<br><br>i) ஒரு குடியிருப்புக்கு 4000சதுர அடி கட்டிட பரப்பளவு மற்றும் அதன் பாகத்திற்கு | 28.60 | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | 3 ஆண்டுகள் | |
| | | தரைதளம் | – | | | 28.60 |
| | | முதல் தளம் | – | | | 33.75 |
| | | ii) ஒரு குடியிருப்புக்கு மேலும் 4000சதுர அடிக்கு மேலும் அமையும் கட்டிட பரப்பளவுள்ள கட்டிடங்களுக்கு<br><br>கீழ் தளங்கள்<br><br>(Slit Floor & Cellar) • | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகள் வரை | 56.25 |
| | | தரை தளம் • | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 33.75 |
| | | முதல் தளம்,• | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 45 |
| | | இரண்டாம் தளம்• | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 56.25 |
| | | மூன்றாம் தளம் • | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 67.50 |
| | | நான்காம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் தளத்திற்கும்• | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 90 |
| | 272 | <u>ஆ)குடியிருப்பில்லாத கட்டடங்கள்</u><br>2000சதுர அடி கட்டிட பரப்பளவு மற்றும் அதன் பாகத்திற்கு– தரைதளம் மற்றும் முதல் தளம் | 36.00 | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | 3 ஆண்டுகள் | 72 |
| | | <u>2000சதுர அடிக்கு மேல் அமையும் கட்டடப்பரப்பளவு</u><br>i)கீழ் தளங்கள் (Slit Floor & Cellar) • | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகள் வரை | 150 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ii) தரை தளம்• | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 100 |
| | | iii) முதல் தளம்• | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 125 |
| | | இரண்டாம் தளம் • | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 150 |
| | | மூன்றாம் தளம் • | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 175 |
| | | நான்காம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் தளத்திற்கும்• | – | 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | | 200 |
| | | அ) கட்டடப் பொருட்கள் சாலையோரம், பொது இடங்களில் தற்காலிகமாக போக்குவரத்திற்கு இடையூறின்றி சேமித்து வைத்தல் (கட்டட உரிமையாளர் நேரடியாக அவரது சொந்த இடத்தில் சேமித்து வைத்தால் இக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை) | 25.34 | 1ச.மீ மற்றும் அதன் பாகம் | 1 வாரம் | 40 |
| | | ஆ) •கட்டிட இடிபாடுகளை பொது இடத்தில் சாலையோரத்தில் தற்காலிகமாக சேமித்து வைக்க, தற்காலிகமாக மட்டும், மற்றும் கட்டிட உரிமையாளர் நிரந்தரமாக அகற்ற வேண்டும். | 25.34 | 1ச.மீ மற்றும் அதன் பாகம் | 1 வாரம் | 40 |
| 8 | 272–1 | அ) தற்காலிக சினிமா தியேட்டருக்கு தடையின்மை சான்று வழங்குதல் | 44068 | இனம் ஒன்றிற்கு | ஒரு தடவை | 45000 |
| | | ஆ) நிரந்தர சினிமா தியேட்டர் கட்ட தடையின்மை சான்று வழங்கல் | 88136 | இனம் ஒன்றிற்கு | ஒரு தடவை | 90000 |
| | | இ) கேளிக்கை அனுமதிக் கட்டணம், சர்க்கஸ், பொருட்காட்சி, கண்காட்சி மற்றும் அனைத்து வகையான சட்டப்படியான கேளிக்கைகள் (பி.பி.ஆர்.சட்டப்படியான கட்டணம் தனியாக வசூலிக்க வேண்டும்) | 17.71 | 1ச.மீ மற்றும் அதன் பாகம் | 2 மாதம் | 18 |
| | | அ) உரிமம் பெற்ற கட்டிட பட வரைவாளராக பதிவு செய்ய வைப்பு தொகை (முதல் தடவை) | | ஒரு முறை மட்டும் | | 5000<br>A B C |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆ) உரிமம் கட்டணம் தரம் A<br>தரம் B<br>தரம் C | 4000<br>3000<br>2000 | ஒரு முறை மட்டும் | ஒரு வருடம் | தரம் A- 4000<br>தரம் B- 3000<br>தரம் C- 2000 |
| | | இ)உரிமையாணைபுதுப்பித்தல் கட்டணம் தரம் A<br>தரம் B<br>தரம் C | 4000<br>3000<br>2000 | புதியது | வருடம் ஒன்றுக்கு | தரம் A- 4000<br>தரம் B- 3000<br>தரம் C- 2000 |
| | 286 | பழைய கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்த அனுமதி வழங்க, | 100 | 1ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | 6 மாதம் | 100 |
| 10 | | அ) கட்டட, மனைப்பிரிவு வரைபடங்கள் கூடுதல் நகல்கள் அத்தாட்சி செய்து கொடுத்தல் | 177.50 | ஒரு நகல் | – | 200 |
| | | ஆ) பலமாடி கட்டிட வரைபடங்கள் கூடுதல் நகல் அத்தாட்சி செய்து கொடுத்தல் | 177.50 | ஒரு நகல் | – | 500 |
| | | இ) மாநகராட்சி வரைபடம்<br>பெரியது (A2 size)<br>சிறியது (A3 size) | | ஒன்று<br>ஒன்று | – | 675<br>337.50 |
| | | ஈ) அனைத்து வகையான இதர சான்றிதழ் வழங்க • | – | ஒன்றிற்கு | – | 450 |
| | | உ) சர்வே வரைபட நகல் (ச.எண். 1க்கு) மற்றும் பதிவேட்டின் நகலுக்கும் (ச.எண்.1க்கு) | 177.50 | நகல் (ச.எண்.1க்கு) ஒன்றிற்கு | – | 300 |
| | | ஊ) அலுவலக மூலமாக அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு வரைபடங்கள் தயார் செய்து நகலுடன் சான்றிதழ் வழங்க | | வேலையின் தன்மையை பொறுத்து ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் வசூலிக்கப்படவேண்டும். | | – |
| 11 | 287 | புதிதாக கிணறு அமைத்தல் அல்லது திருத்தி அமைத்தல்<br>அ) மனை வரைபடம் அங்கீகரிக்க | – | ஒவ்வொன்றிற்கும் | ஒரு வருடம் | 225 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆ) கிணறு வெட்ட அனுமதி அல்லது புதுப்பித்தல் | 177.50 | ஒவ்வொன்றிற்கும் | ஒரு வருடம் | 225 |
| | | இ) உயர்மட்ட தொட்டி கட்டுதல் • | – | ஒவ்வொன்றிற்கும் | ஒரு வருடம் | 225 |
| | | ஈ) போர்வெல் அமைத்தல் | 177.50 | ஒவ்வொன்றிற்கும் | ஒரு வருடம் | 450 |
| 12 | 288 | குடிசை புதிதாகவோ, கூடுதலாகவோ அல்லது கூரையை மாற்றி அமைக்கவோ கட்டும் கட்டுமானங்களுக்கு | கட்டணம் ஏதும் இல்லை (இலவசம்) | 1ச.மீ மற்றும் அதன் பாகம் | 3 ஆண்டுகள் | – |
| | | சுற்றுச்சுவர் 2.40மீ உயரத்திற்கு மேல் | 88.50 | 1 RM | 1 ஆண்டுகள் | 225 |
| | | குளியலறை, மல அறை அல்லது இரண்டும் சேர்த்து டாய்லெட் கட்டுவதற்கு, திருத்தி கட்டுவதற்கு (புதிதாக பிரதான கட்டிடங்களுடன் கட்டும் குளியலறை, மல அறைகளுக்கு இது பொருந்தாது) | 108 | ஒவ்வொரு இனத்திற்கும் | | 108 |
| **II) இயந்திர நிறுவனங்கள் மின் மோட்டார்கள் அனுமதி** | | | | | | |
| 13 | 361 | அ) குடிசைத் தொழில் பட்டியலில் உள்ள தொழில்கள் 5 குதிரை மின் மோட்டார் வரை | – | 5 குதிரை சக்தி வரை | ஒரு தடவை | 1000 |
| | | ஆ) குடிசைத் தொழில் சம்பந்தப்பட்ட இயந்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் | – | ஒவ்வொன்றிற்கும் | ஒரு தடவை | |
| | | **இதர ஆலைகள்**<br>அ) 10 குதிரை சக்தி மோட்டார் வரை | – | 10 குதிரை சக்தி அல்லது அதன் பாகம் | ஒரு தடவை | 2000 |
| | | ஆ) 25 குதிரை சக்தி மோட்டார் வரை | – | 25குதிரை சக்தி மற்றும் அதன் பாகம் | ஒரு தடவை | 4000 |
| | | இ) 50குதிரை சக்தி மோட்டார் வரை | – | 50குதிரை சக்தி மற்றும் அதன் பாகம் | ஒரு தடவை | 6000 |
| | | ஈ) 75குதிரை சக்தி மோட்டார் வரை | – | 75குதிரை சக்தி மற்றும் அதன் பாகம் | ஒரு தடவை | 10000 |
| | | உ) 100குதிரை சக்தி மோட்டார் வரை | – | 100குதிரை சக்தி மற்றும் அதன் பாகம் | ஒரு தடவை | 12000 |
| | | ஊ) 150 குதிரை சக்தி மோட்டார் வரை | – | 150குதிரை சக்தி மற்றும் அதன் பாகம் | ஒரு தடவை | 18000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஏ) 200குதிரை சக்தி மோட்டார் வரை | – | 200குதிரை சக்தி மற்றும் அதன் பாகம் | ஒரு தடவை | 25000 |
| | | ஏ) 200குதிரை சக்தி மின் மோட்டார்களுக்கு கூடுதலாக இருந்தால் ஒவ்வொரு 200 குதிரை சக்தி மோட்டார்களுக்கும், | – | | ஒரு தடவை | 20000 / ஒவ்வொன் றிற்கும் |
| | | ஐ)ஒவ்வொரு இயந்திரங்களுக்கும் | – | ஒவ்வொரு இயந்திரம் | ஒரு தடவை | 500 |

<u>பொது நிபந்தனைகள்</u>

1. அனுமதியின்றி நடைபெறும் கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் பொழுது கட்டிட உரிமையாணைக் கட்டணத்தின் 1 மடங்கு (100சதவீதம்) கூடுதலாக வசூலிக்கப்படும். இது காலம் கடந்து புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கும் பொருந்தும்.

2. உரிமக்காலம் முடியும் முன்னர் புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கு எவ்வித சலுகையின்றி மேலே பத்தி 1ல் குறிப்பிட்ட சட்ட நடைமுறையில் உள்ள கட்டணங்களே வசூலிக்கப்படும்.

3. அனைத்து மனுக்களின் மீது பெறப்படும் மொத்த கட்டணத்தில் 25சதவீதம் மேற்படி மனு பரிசிலனைக் கட்டணம் என சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு பொருள் கொள்ள வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலாவது ஏதாவது ஒரு கட்டணத்தை திரும்ப வழங்க நேரிட்டால் தகுதி வாய்ந்த இனங்களுக்கு மட்டும் 25சதவீதம் கழித்து மீதித்தொகையை மட்டுமே திரும்ப வழங்கப்படும். அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் செலுத்தப்பட்ட வரன்முறைக் கட்டணங்கள், அபிவிருத்தி கட்டணங்கள் மற்றும் சாலை அபிவிருத்தி கட்டணங்கள் எக்காரணத்தை கொண்டும் திரும்ப வழங்க இயலாது. மனை அங்கீகரிக்க செலுத்தப்பட்ட திட்ட அனுமதிக் கட்டணமும் திரும்ப வழங்க இயலாது.

4. கையினால் இயக்கப்படும் இயந்திரங்களுக்கும் வீட்டு உபயோகத்திற்கு உபயோகப்படுத்தப்படும் மின்மோட்டார்கள் மற்றும் இயந்திரங்களுக்கும் கட்டணம்

செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

5. இயந்திர நிறுவனங்கள் அனுமதியின்றி இயந்திரங்களை நிறுவிய பின்னர் மனுச் செய்யும் பொழுது நடைமுறைக் கட்டணத்துடன் 100சதவீதம் கூடுதலாக அபராதமாக வசூல் செய்யப்படும்.

6.அனுமதியின்றி இயந்திரங்கள்/மின்மோட்டார்கள் மாநகராட்சியால் பறி முதல் செய்து அதனை மீண்டும் திரும்ப வழங்க நேரிட்டால், நடைமுறைக் கட்டணத்தைப் போல் மும்மடங்கு அனுமதி கட்டணம் அபராதமாக செலுத்த வேண்டும்.

7.அ) கட்டிட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்படும் குடியிருப்பு உபயோக கட்டிடங்களின் விண்ணப்பங்களுடன், மழைநீர் சேகரிப்பு வசதி இல்லாத இடத்திற்கு வைப்புத் தொகையாக ரூ.2500/— செலுத்த வேண்டும்.

ஆ) குடியிருப்பில்லாத மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாக கட்டிடங்களுக்கு மழைநீர்சேகரிப்பு வசதி இல்லாத இடத்திற்கு கீழ்கண்டவாறு வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டும்.

1) அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடியிருப்பு ஒன்றிற்கு ரூ.1250/— வீதம் வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

2) வணிக உபயோக கட்டிடங்களுக்கு, திறந்தவெளி தளத்தின் பரப்பளவில் ச.மீ ஒன்றுக்கு ரூ.100/—வீதம் செலுத்தப்பட வேண்டும்.

இ) மழைநீர் சேகரிப்பு வசதிகள் 2 வருட காலத்திற்குள் செய்து சம்மந்தப்பட்ட பிரிவு இளநிலை பொறியாளரின் சான்றுடன் விண்ணப்பம் செய்தால், செலுத்தியத் தொகை திரும்ப வழங்கப்படும். தவறினால் மேற்படி தொகை மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும். மனுதாரரால் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு காட்சிப் பொருளாக மட்டும் அல்லாமல் தொடர்ந்து முறையாக செயல்படும் வண்ணம் பராமரிப்பது மனுதாரரின் கடமை. அவ்வாறு பராமரிக்கப்படாத நிலையில் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடம் அபராதமாக ரூ.1000/— வசூலிக்கப்படும்.

8 . மதம், துக்க காரியங்கள் போன்றவைக்கு பொது இடங்களில் போக்குவரத்திற்கு இடையூறின்றி அமைக்கப்படும் பந்தல்களுக்கு கட்டணம் கிடையாது.

9 . பாதுகாப்பு வைப்புத் தொகை குடியிருப்பு கட்டிடத்திற்கு இரண்டாவது தளத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 50/—ம் அதற்கு கூடுதலான தளத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 75/—ம் வணிக உபயோக கட்டிடத்திற்கு (பள்ளி, கல்லூரி, திருமண மண்டபம் கடைகள்) மற்றும் தொழிற்சாலை உபயோக கட்டிடத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.150/—ம் வசூலித்துக் கொண்டு அனுமதி உத்தரவு வழங்கப்படும். வரைபடத்தின்படி கட்டிடம் கட்டப்பட்டு மனுதாரரின் உரிய விண்ணப்பத்தின் பேரில் மேற்படி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும். வரைபடத்திற்கு மாறுதலாக கட்டிடம் கட்டியிருந்தால் இந்தத் தொகையினை திரும்ப வழங்க இயலாது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. புதிய கட்டண விகிதங்கள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து, 01.11.2018 முதல் திருத்திய கட்டணத் தொகையினைஅமுல்படுத்த அனுமதிக்கலாம்.

2. மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 08.10.2018